**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.69** **நாள்: 28.05.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மோட்டார் வாகனமில்லா கொள்கையின் அடிப்படையில் நகரின் முக்கிய சாலைகளில் பிரத்யோக நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதை அமைக்கும் திட்டத்தினைசெயல்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் சிறப்பு அலுவலர் / ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சியில் மோட்டார் வாகனமில்லா கொள்கையின் (Non Motorised Transport) அடிப்படையில் நகரின் அனைத்து சாலைகளிலும் பிரத்யோக நடைபாதை மற்றும் மிதிவண்டிபாதை அமைக்கும் திட்டத்தினை செயல்படுத்த கலந்தறிதர்குரியவர்களுடனான (Consultant) ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் மாளிகை வளாகத்தில் இன்று (28.05.2019) நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கடந்த சில வருடங்களாக அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் முழுமையான சாலை வடிவமைப்பு (Complete Streets) திட்டத்தின் கீழ் நடைபாதை பயனாளிகளுக்கு ஏற்ற வகையில் பாதுகாப்பான சாலைகளை அமைக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய சாலைகள் அகலமான மற்றும் நீளமான நடைபாதைகளுடன் பாதசாரிகள் பாதுகாப்பாக சாலையை கடந்து செல்லும் வகையிலும் தனியாக மிதிவண்டி பாதை, வசதியான பேரூந்து நிறுத்தம், ஒழுங்குபடுத்தப்பட்ட வாகன நிறுத்தம் மற்றும் சரியான அளவுடன் கூடிய வாகன பாதைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி சுமார் 100 கி.மீ நீளத்திற்கு அகலமான நடைபாதைகளுடன் கூடிய சாலைகளை வடிவமைத்துள்ளது. இதற்காக 2014–15ம் ஆண்டிற்கான அட்கோ தேசிய விருதும், மத்திய நகர்புற வளர்ச்சி மேம்பாட்டுத் துறை சார்பாக சிறந்த மோட்டார் வாகனமில்லா திட்டத்திற்கான தேசிய விருதினை மத்திய நகர்புற வளர்ச்சி மேம்பாடு மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர் திரு.பபுல்சுப்பிரியே அவர்களிடமிருந்தும், இந்தியா டுடோ நிறுவனத்தின் சார்பாக 2014ம் ஆண்டிற்கான சிறந்த நகரத்திற்கான விருதும், வால்வோ நிறுவனத்திடமிருந்து 2014ம் ஆண்டிற்கான நிலையான இயக்கத்திற்கான தேசிய விருதும், பாரிஸ் நகரில் 2015ம் ஆண்டிற்கான நிலையான எதிர்காலத்திற்கான சர்வதேச விருதினையும் (Sustainia Award) பெற்றுள்ளது.

மேலும், இத்திட்டத்தினை விரிவுபடுத்தி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சுமார் 70 ச.கி.மீ பரப்பளவில் பிரத்யோக நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதையுடன் கூடிய சாலைகள் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டமானது மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டினை தவிர்த்து பொதுமக்களுக்கு தடையில்லா நடைபாதை போக்குவரத்தினை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது.

முழுமையான சாலை வடிவமைப்பு திட்டத்தின் முக்கிய நோக்கம் நடைபாதைகளுடன் கூடிய தெருக்கள் அமைத்தல், மேம்பாலங்களின் கீழ் காலியாக உள்ள இடங்களில் பூங்காக்கள் அமைத்தல், நீர்நிலை கால்வாய்களின் கரைகளில் நடைபாதை மற்றும் மிதிவண்டிபாதை அமைத்து பொதுமக்களுக்கு இடவசதியினை வடிவமைப்பதே ஆகும்.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., அவர்கள், திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், தலைமை பொறியாளர்கள் திரு.எல்.நந்தகுமார் (சிறப்பு திட்டங்கள்), திரு.என்.மகேசன் (கட்டடம்), திரு.எஸ்.ராஜேந்திரன் (பாலங்கள்), திரு.எஸ்.காளிமுத்து (பூங்கா), திரு.கே.சின்னசாமி (திட்டங்கள்), கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளை சார்ந்த சிறந்த கட்டட வடிவமைப்பு நிறுவனங்கள், நகர்புற திட்டமிடல் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**